
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1251

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

122

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## உலகப் போரைத் தொண்டர்களுக்கு விளக்கிய பெரியார்!

'திருநெல்வேலி ஜில்லா தமிழர் மாநாடு' 8.6.1940 அன்று நடைபெற்றது. பெரியார், அண்ணா, பொன்னம்பலனார், நாகை மணி உள்ளிட்டோர் முந்தைய நாள் இரவு, திருச்சி, மண்ணச்சநல்லூரில் இருந்து புறப்பட்டு காரில் நெல்லை வந்தடைந்தனர். காலை 9 மணிக்கு ஊர்வலம் தொடங்கியது. உள்ளூர் மற்றும் வெளியூரில் இருந்து பலரும் பங்கேற்ற அந்த ஊர்வலம் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று, மாநாட்டுப் பந்தலை அடைந்தது. பந்தலின் முகப்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்க்கொடியை அண்ணா ஏற்றிவைத்தார். சரியாகக் காலை 10 மணிக்கு மாநாடு தொடங்கியது.

இராஜம் அம்மையார், மாநாட்டைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினார். ஏ.வி.முத்தையா பிள்ளை வரவேற்புரையாற்ற விருந்த நிலையில், உடல்நிலை காரணமாக அவர் பங்கேற்கவில்லை. அவருக்குப் பதிலாக சி.டி.நாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார். இம்மாநாட்டிற்குத் தலைமை வகித்த பெரியார், தனது முன்னுரையில்... 'நீதிக்கட்சியின் கொள்கை', 'தமிழர் வாழ்க்கை', 'திராவிட நாகரிகம் - ஆரிய நாகரிகம்', 'காந்தியம்' 'அமைச்சர்களின் வாக்கு நாணயம்', 'காங்கிரஸ்', 'காங்கிரஸ் ஆட்சியில் தமிழர் பட்ட கஷ்டங்கள்', 'ஆரிய சூழ்ச்சியால் இங்குள்ள தொழிலாளர்களின் நிலைமை', 'திராவிட நாட்டுப் பிரிவினை', 'ஐரோப்பா யுத்தம்' உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து 2 மணி நேரம் விவரித்துப் பேசினார்.

பின்னர், சர் ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களின் உருவப்படத்தை, சென்னையைச் சேர்ந்த வி.எஸ்.தேவசுந்தரம் அவர்கள் திறந்துவைத்து, பன்னீர்செல்வத்தின் தியாகம், சேவை பற்றி எடுத்துரைத்தார். அத்துடன் காலை நேர நிகழ்ச்சிகள் முடிந்து, மதிய உணவுக்காக மாநாடு கலைந்தது. மீண்டும், மாலை 4 மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கியவுடன் பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




ஓவியம் : சிகரன்

குறிப்பாக, இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுகொண்டிருந்த காலகட்டம் அது. "அப்போரில் பிரிட்டன் வெற்றி பெற நம்மாலான உதவிகளைத் தாராளமாகச் செய்ய வேண்டும், இந்தியாவில் நாஜி உளவாளிகளாக நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கொடும் படையை அடக்க, சர்க்கார் முன்வர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பிரிட்டன் இப்போரில் வென்றால், உலகில் ஜனநாயகமும் நாகரீகமும், நீதியும் நிலைக்கும், இந்நாடும் முன்னேறும்" என்று அதற்கு விளக்கமும் அளித்தார் பெரியார்.

அதேபோல, 'தமிழரின் கிளர்ச்சியை மதித்து, கட்டாய இந்தியை ரத்துசெய்த கவர்னருக்கு நன்றி - இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்றுச் சிறைபுகுந்த இயக்கத்தினருக்கு நன்றி', 'ராஜாஜியால் விதிக்கப்பட்ட விற்பனை வரி - புகையிலை வரியை நீதிக்கட்சியின் கிளர்ச்சிக்கு இணங்கி பாதியாகக் குறைத்த கவர்னருக்கு நன்றி', 'திராவிட நாடு' இந்தியாவுடன் பிணைக்கப்பட்டதால் தனி அரசுரிமையை இழந்து, வடநாட்டுக்குச் சந்தையாகிப் பாழாகிவருவதால், மீண்டும் திராவிட நாடு பண்டைய சிறப்புடன் விளங்க, திராவிட நாடு தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற காஞ்சி மாநாட்டிற்கு ஆதரவு', 'காங்கிரஸ் ஆட்சியால் மதக் கலவரத்தாலும் கலைகளாலும், நாகரிகத்தாலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் தனி நாடு (பாகிஸ்தான்) கோருவதற்கு ஆதரவு' என எட்டு முக்கியத் தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

அதன் பின்னர், அண்ணா, பெரியார் உள்ளிட்ட தலைவர்களின் எழுச்சிமிக்க உரைகளுடன் மாநாடு முடிவுற்றது.

**...கூட்டம் திரளும்**

## இனி, கீழடிக்குச் சவுக்கடி!

தமிழர்களின் தொன்மை, பண்பாடு குறித்து எந்த அக்கறையும் கொள்ளாத அரசு, தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. அதன்மூலம் இனி, ஆர்.எஸ்.எஸ். திட்டங்கள் நிறைவேற்றப்படும் என முகநூலில் கருத்துப் பகிர்ந்துள்ளார், புதுச்சேரியைச் சேர்ந்த முனைவர் சிவ. இளங்கோ.

"கீழடி நாகரிகம், சுமார் 2600 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை நிறுவிடும் கீழடியின் தொல்லியல் ஆய்வறிக்கையை, இரண்டு ஆண்டுகள் கடந்தும் ஒன்றிய அரசு வெளியிடவில்லை. அவ்வறிக்கை 'முழுமையற்றது' என்று இந்தியத் தொல்லியல் துறையின் 'மதிப்பீட்டுக் குழு' கூறிய நிலையில், அடுத்து, உரிய விளக்கங்களுடன் மறுப்பு தெரிவித்திருந்தார், கீழடித் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன். இந்த நிலையில், இந்தியத் தொல்லியல் துறையின் ஐவர் கொண்ட உள்நிலைக் குழு, கீழடிக் களத்திற்கே சென்று மறு ஆய்வு செய்யும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, இந்தியத் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநர் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் புதிய அரசாங்கம் அமைந்த 50 நாட்களில், ஆர்.எஸ்.எஸ். இன் முக்கியமான ஐந்து திட்டங்கள், தற்போது நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட உள்ளன.

1.மதம் மாறியவர்களுக்கு இட ஒதுக்கீடு இனி கிடையாது.

2.திருப்பரங்குன்றத்தில் அளவைக் கணக்கீடு செய்வதற்கும், அதற்கான கால அவகாசத்திற்கும் அனுமதி.

3.கோவையில் சைவ, வைணவக் கோயில்களுக்கு அருகில் கிறிஸ்துவ சர்ச் கட்டுவதற்கு அனுமதி மறுப்பு.

4.சிறுபான்மையினரின் நிறுவனத் திட்டங்களுக்கு, வெளிநாட்டு நிதி உதவி மறுப்பு.

5.பக்ரீத் அன்றோ அல்லது வேறு நாட்களிலோ பசுவதை செய்யக் கூடாது. பசு மாமிசக் கடைகள் திறக்கப்படக் கூடாது.

தமிழ்நாட்டில், தி.மு.க. அரசு இருந்த வரை, மேற்கண்ட பாசிச வெறிச்செயல்கள், செயல்படுத்த முடியாமல் இருந்தன. அரசாங்கம், அரசியல் இவையெல்லாம் என்னவென்றே தெரியாதவர்களின் அரசாங்கம் அமைந்தவுடன், அவர்கள் துணையோடு ஒன்றிய அரசும் ஆர்.எஸ்.எஸ்சும் தாங்கள் நினைத்த 'ஒரே நாடு ஒரே மொழி' திட்டத்தை நிறைவேற்றத் துடித்துக்கொண்டுள்ளனர்.

இனி, கீழடி நாகரிகத்தின் காலம் 2000-க்குக் கீழே இறக்கப்படும். தமிழ் மொழி, தமிழ் எழுத்துருவின் (தமிழி) காலமும் 2600-லிருந்து குறைக்கப்பட்டுவிடும். இதை ஏற்காமல் நீதிமன்றம் சென்றால், அங்கே அதற்கென்றே உள்ள அரசு வழக்குரைஞர்கள் இதற்காகவே காத்துக்கொண்டிருப்பார்கள்" என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





வி.பி.மணி

### வணிகர்களின் முழுமையான ஆதரவு!

2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழக அனைத்து வணிகர்கள் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில், கழக அணிக்கு வணிகர்களின் முழுமையான ஆதரவை வழங்குவது என முடிவெடுத்தோம். அதையடுத்து, சங்கத்தின் தலைவர் சி.நவமணி அவர்களின் தலைமையில், அனைத்து வணிகப் பிரதிநிதிகளும், சென்னை அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞரைக் கண்டு ஆதரவு கடிதம் அளித்தோம். கழகப் பொதுச்செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களும், பொருளாளர் அண்ணன் ஆற்காட்டார் ஆகியோரும் உடனிருந்து உரையாடியது, இன்றும் எனது நெஞ்சில் நிழலாடும் அரிய நினைவுகள்.

**- சேப்பாக்கம் வி.பி.மணி, மாநிலச் செயலாளர், கழக வர்த்தகர் அணி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

122

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## சாதி அழிவது எப்போது?

எழுத்தாளர் பெருமாள் முருகனின் வீட்டில், 2005 முதல் மாதம் ஒருமுறை நடைபெற்றுவரும் 'கூடு ஆய்வுச் சந்திப்பின்' 50-ஆம் நிகழ்வினையொட்டி, 32 நபர்களால் எழுதப்பட்ட அனுபவக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு, 'சாதியும் நானும்'. இந்தத் தொகுப்பு, காலச்சுவடு பதிப்பக வெளியீடாக 2013-இல் வெளியாகியுள்ளது.

இதில் பங்களித்துள்ள கட்டுரையாளர்கள் அனைவரும் பட்டதாரிகள். பெரும்பாலானவர்கள் முனைவர் பட்டம் பெற்றவர்கள். கல்விதான் சாதியை விமர்சனபூர்வமாக அணுகும் பக்குவத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்பது திண்ணம்.

இந்நூலில், பலர் தங்கள் சாதியைக் குறிப்பிட்டும் சிலர் குறிப்பிடாமலும், சிலர் மறைமுகமாகக் குறிப்பிட்டுமே தங்களின் அனுபவங்களை எழுதியுள்ளார்கள். சாதியை விமர்சனபூர்வமாக எழுதியதே வரவேற்கத்தக்கது. பார்ப்பனர்களில் தொடங்கி இடைநிலைச் சாதிகள், தலித்துகள் என அனைவரும் ஏதோ ஒரு வகையில் சாதியால் தாக்கம் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். சிலர் ஒடுக்குபவராக இருந்து தங்களின் குற்ற உணர்வுகளைப் பகிர்ந்துள்ளார்கள், பலர் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்து வலிகளையும் அதிலிருந்து மீண்டு வந்த அனுபவங்களையும் பதிவுசெய்துள்ளார்கள்.




சாதி தண்ணீரைப் போல் அதன் பண்பினை சூழலுக்கேற்றார் போல் மாற்றிக்கொண்டே வருகிறது, நவீன சூழலுக்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது. புரிந்துகொள்ளவே சிக்கலான ஒரு அகக் காரணியாகத்தான் சாதி தன்னை நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறது.

பிறப்பு என்பதே ஒரு விபத்து என்றெடுத்துக்கொண்டால், அந்த விபத்தில் ஏற்பட்ட வடு தான் சாதி, இறக்கும் வரை இந்தச் சமூகத்தில் இருக்கும் அனைவரும் ஏதோ ஒரு வகையில் அதை வலியுடன் தூக்கி சுமந்தாகவேண்டி இருக்கிறது. அத்தகைய வலிகளை, இந்நூலில் இருக்கும் பல்வேறு கட்டுரைகளில் பார்க்க முடிகிறது.

சாதி பற்றிய எதிர்மறையான உரையாடலுக்கு நாம் தயாராக இருக்கிறோமா? என்ற கேள்வியை நாம் நமக்கே கேட்டுக்கொள்ள வேண்டும், சுய சாதி அடையாளத்தை விடுத்து, சாதியை நாம் அறிவுபூர்வமாக அணுக வேண்டும். இந்தக் கட்டுரைகள் அதைத்தான் வலியுறுத்துகின்றன. கசப்பான அனுபவங்களுக்கான அடிப்படைக் காரணம் சாதி தான், அதை உதிர்ப்பது கடினம்தான். ஆனால், சாதியைப் பின்னுக்குத் தள்ள முடியும். பிற ஆக்கபூர்வமான விஷயங்களை முதன்மைப் படுத்துவதன்மூலம் சாதியை நம்மால் நிச்சயம் பின்னுக்குத் தள்ள முடியும். முற்றிலும் ஒழிக்க முடியுமா என்பதை சாதியின் பின்னேற்றத்தை வைத்துத் தீர்மானிக்கலாம். அதற்கும் கல்வியின் வாசத்தை நுகர்ந்த அனைவரும் முன்னுக்கு வர வேண்டும்.

> **முற்றிலும் ஒழிக்க முடியுமா என்பதை சாதியின் பின்னேற்றத்தை வைத்துத் தீர்மானிக்கலாம். அதற்கும் கல்வியின் வாசத்தை நுகர்ந்த அனைவரும் முன்னுக்கு வர வேண்டும்.**

இந்தக் கட்டுரைகள் எல்லாம் வலிகளின், குற்றஉணர்வுகளின், சாதிக்கு எதிரான ஆற்றாமையின் விளைவுகள். அனுபவக் கட்டுரைகள் என்ற காரணத்தால், நமக்கு நடந்த நினைவுகளையும் அது கிளறிவிட்ட வண்ணமே இருக்கிறது.

மனித இனத்தின் அழிவு, சாதியை நிச்சயம் அழித்துவிடும், அதுவரை என்ன செய்வது?

**...வாசிப்போம்.**

## வரலாறு

### தயாராக இருக்கிறோம்!

1953-ஆம் ஆண்டு ஜூலை 13-ஆம் தேதி, கழகத்தின் புதிய சட்ட திட்டத்தின்படி அமைக்கப்பட்ட செயற்குழுவின் முதல் கூட்டம், அறிவகத்தில் நடைபெற்றது. ஜூலை 15-ஆம் தேதி, மும்முனைப் போராட்டத்தினை நடத்துவதற்கான திட்டங்களைத் தீட்டியது. போராட்டம் குறித்த தீர்மானங்களை எழுதி முடிக்கும் தருணத்தில், காவல் துறையினர் அறிவகத்தைச் சூழ்ந்தனர். கூட்டம் நடைபெற்ற முதல் மாடிக்கு ஏறி வந்து, பேரறிஞர் அண்ணாவிடம், 'வந்துவிட்டோம்' என்றனர். அண்ணாவும் 'தயாராக இருக்கிறோம்' என்றார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900